இதழ்–83

01.05.2025

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thu-

ஆசிரியர்
ச.சந்தோஷன்

இணை ஆசிரியர்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

செய்தியியலாளர்
ச.மதுஷா

வடிவமைப்பாளர்
ர.அபிரா
வ. குணநீதன்

திறனாய்வாளர்
கு.கீர்த்தனன்

# இவ்விதழில் துமித்தவை....

03 புத்தகப்பைச் சுமையால் பாதிக்கப்படும் மாணவர்கள்
06 சந்திரனை சாட்சி வைச்சு நடந்த சங்கதிகள் ஏராளம்
14 இரண்டரை வயது சிறுமியின் அசாத்திய ஆற்றல்
15 கட்டிடத்திற்குள் ஒரு நகரம்
17 நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவர் அரசுப் பணியில் சேர வழி உள்ளதா?
19 மின்னலும் மற்றும் இடியும் எவ்வாறு உருவாகிறது?
22 சிரிப்பு மருத்துவர் சார்லி சப்ளின்
18 மாவைக் கந்தவேள் பெருமானுக்கு 50 ஆண்டுகளின் பின் குடமுழுக்கு
28 எதிர்காலத்தைக் கணிக்கும் அறிவு உண்மையா?
31 சுதேசி கப்பல் நிறுவனத்தை வ.உ.சி உருவாக்கியது எப்படி?
37 வெளியாகிய கபொத உயர்தர பரீட்சை முடிவுகளில் எமக்கு கிடைத்த சில சாதனை விபரங்கள்
42 ஐபிஎல் வரலாற்றில் மும்பை அணி கண்டு எடுத்த வைரங்கள்

ஆசிரியர் பதிவு

# புத்தகப்பைச் சுமையால் பாதிக்கப்படும் மாணவர்கள்

பாடசாலை மாணவர்களின் உடல்நலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு முக்கிய காரணியாக இன்று புத்தகப்பைகளின் அதிக எடை அமைந்துள்ளது. கல்வி என்பது ஒவ்வொரு மாணவருக்கும் அறிவை வழங்கும் பயணமாக இருக்க வேண்டும். ஆனால் அந்த பயணம், ஒவ்வொரு நாளும் பின் சுமக்கும் ஒரு பாரமாக மாறியுள்ளது. மாணவர்கள் அவர்களுடைய வயதுக்கும், உடல் திறனுக்கும் மேற்பட்ட எடையை சுமக்கின்றனர். இந்த நிலைமையால், அவர்களது உடல்நலம் மீது தீவிரமான பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பது பல்வேறு ஆய்வுகளிலும், மருத்துவ அறிக்கைகளிலும் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு மருத்துவர் சமல் சஞ்சீவ் அவர்கள் இது பற்றி கூறுகையில், புத்தகப்பைகளின் அதிக எடை காரணமாக, மாணவர்கள் முதுகுத்தண்டு வலி, கழுத்து வலி, தலைவலி, நரம்பு கோளாறுகள் மற்றும் சமநிலை குறைபாடு போன்ற பலவிதமான உடல்





நலப் பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர் என கூறியுள்ளார். இவை மாணவர்களின் வளர்ச்சி மட்டுமின்றி அவர்களின் கல்விச் செயல் திறனையும் மங்கச்செய்கின்றன.

மாணவர்கள் பெரும்பாலும் தங்களது உடல் எடையின் 15 முதல் 20 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட எடையை தங்களது புத்தக பைகளில் சுமக்கின்றனர். இது நெற்றிப் பஞ்சையிலும் முதுகுத்தண்டிலும் நிரந்தர பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய நிலைமைக்கே வழிவகுக்கின்றது. குறிப்பாக, குறைந்த வயதிலேயே இவ்வாறான பாதிப்புகள் ஏற்படுவதை மருத்துவர்கள் மிகுந்த கவலையுடன் கூறுகின்றனர்.

இந்தப் பிரச்சினை பற்றி கடந்த பல ஆண்டுகளாகவே பேசப்பட்டு வருகிறது. ஆனால் உரிய தீர்வுகள் எடுக்கப்படாமை மிகவும் கவலைக்கிடமானது. கல்வி அமைச்சும், சுகாதார அமைச்சும் ஒன்றாக இணைந்து ஒரு திட்டமிடல் நடவடிக்கையை மேற்கொள்வது அவசியமாகிறது.

தூமியின் ஆய்வுகளூடாக பின்வரும் ஆலோசனைகளை பற்றி சிந்தித்து செயலாற்றுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தூமி அன்புடன் வேண்டிக் கொள்கிறது.



1.பாடப்புத்தகங்களை பகுதிகளாக பிரித்து அச்சிடுதல்,
2.தேவையற்ற புத்தகங்களை தினசரி பள்ளிக்கு கொண்டு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தல்,
3.பாடசாலைகளில் தனித்துவமான புத்தகங்கள் வைக்குமிடங்களை ஏற்படுத்தல்,
4.பாடப்புத்தகங்களின் எடையைக் கருதி நேர சூசி தயாரித்தல்,
5.மின்னணு புத்தகங்கள் மற்றும்



டிஜிட்டல் கற்றல் முறைகளை ஊக்குவித்தல்

இவ்வாறு பல்வேறு தீர்வுகள் பரிந்துரைக்கப்படுகின்றன. இதனுடன், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களும் இப்பிரச்சினையின் தீவிரத்தன்மையை உணர்ந்து, தங்களது பங்களிப்பை வழங்க வேண்டும். பிள்ளைகள் தினமும் புத்தகம் அடுக்கும் சோம்பேறித்தனத்தால் நேர அட்டவணைக்கேற்ப புத்தகங்களை கொண்டு செல்லாமல் எல்லா புத்தகங்களையும் கொண்டு செல்வார்கள். இதனை பெற்றவர்களும் ஆசிரியர்களும் உரிய முறையில் கண்காணித்து பிள்ளைகளை நெறிப்படுத்த வேண்டும்.



ஒரு நாடு தனது எதிர்காலத்தை மாணவர்களிடம் எதிர்பார்பது என்பது ஒரு வழக்கமான சொற்றொடராக இல்லாமல் செயல்பாட்டிலுள்ள யதார்த்தமாக இருக்க வேண்டும். அந்த எதிர்காலத்தை பாதுகாக்கும் முதல் படியாக, மாணவர்களின் உடல்நலத்தை காப்பது மிக அவசியமான ஒன்றாகும். எனவே, புத்தகப்பைகளின் எடையை கட்டுப்படுத்தும் திட்டங்களை உடனடியாக செயல்படுத்த அரசாங்கம், கல்வி நிறுவனங்கள் மற்றும் பெற்றோர் அனைவரும் ஒற்றுமையாக செயல்பட வேண்டும்.

இது மாணவர்களின் ஆரோக்கியமான வாழ்வையும், சிறந்த கல்விச் சூழலையும் உருவாக்கும் முன்னோடியான நடவடிக்கையாக அமையும்.

ஒன்றாக சிந்தித்து நன்றாக செயற்படுவோம்




”நிலா பேசுவதில்லை
அது ஒரு குறை இல்லையே.. ”

அது குறையே இல்லை.... நிறை..!

நிலவு மட்டும் பேசியிருந்தால் காலங்காலமாய் எத்தனை கதைகளை அது சொல்லியிருக்கும்?

பல அர்த்தங்களை கொண்ட ஓவியம் போல் அது ஊமையாய் இருப்பதால்தான் காலந்தோறும் நிலவை துணையாய் எண்ணுகிறார்கள்.

நிலவு நமக்கு சொல்கிற கதைகள் ஏராளம். கதை சொல்லி சோறு ஊட்டுகிற அன்னை எப்போது நிலவை காட்டி சோறு ஊட்டத் தொடங்கினாளோ அன்று தொட்டு நாம் நிலவிடம் கதைபேசத் தொடங்கிவிடுகிறோம்.

காதலர்களின் பெரிய தெய்வம் நிலவுதான். காதலர்களை நன்குணர்ந்த தோழமையும் நிலவுதான். நிலவிடம் கேளுங்கள்.. அது சொல்லக்கூடிய காதல் கதைகள் எத்தனையோ..

நிலவின் சாட்சியத்தில் நிகழ்ந்த இரண்டு காதல் கதைகளை

பேசுகிறது எண்பதுகளில் வெளிவந்த ஒரு திரை இலக்கியம் - கிராமத்து காவியம். பொருள் தேடி அலைந்து கொண்டிருந்த உலகம் நின்று இரசித்துச் சென்ற ஒரு கதை. வெற்றிகளும் சாதனைகளுமே - இன்பமும் சுகமும் என்று நினைத்த உலகிற்கு "சுகராகம் சோகந்தானே....." என்று பட்டிதொட்டியெங்கும் கூவிய குயிலின் கதை.

பச்சை நிற களம்.. பசுமையான வயல்வெளி.. வயலிற்கு வனப்பு தரும் ஒற்றை ஆறு... ஆற்றிற்கு இந்தப்புறம் தான் அந்த அழகிய கிராமம். கூவுகிற குயில், இன்னும் சில பறவைகள், ஆடுகள், மாடுகள் என அத்தனை அழகுடன் மனிதர்கள் சிலரும் நிறைந்திருந்த ஒரு கூட்டுக் கிராமம். கூட்டுக் குடும்பங்களே இல்லாது போன நாளில் ஒரு கூட்டுக்கிராமம் இருந்த கதை நம் கற்பனையை நனைக்கிறது.

அடுக்கு மொழியால் வசனமளந்தே சுட்டெரிப்பவள் பொன்னாத்தா.. பொன்னாத்தாவின் கணவன் மலைச்சாமிதான் கதையின் நாயகன்.

'இந்த மனுசனிற்கு வாக்கப்பட்டு நான் என்னத்த கண்டேன். முப்பது வருசமா ஓட்டு வளையத்த பார்க்கிறதும், மூக்க சிந்தி போடுறதுமாவே காலத்த கழிச்சிட்டன்.. கல்லு சிவத்துக்கு கூட கண்ணு காது இருந்த பொன்னாத்தா பேச்சிற்கு இந்நேரம் உருகி ஒடியிருக்கும்..'

பொன்னாத்தா அவள் சோகத்த சொல்லிச் சொல்லி கூவுவாள். மலைச்சாமி சொல்லமாட்டார். வயல் மேடு தேடிச்சென்று பாடுவார்...

'ஏதோ என்பாட்டுக்கு
நான் பாட்டுப் பாடி
சொல்லாத சோகத்த
சொன்னேனடி....'

மலைச்சாமியின் பாட்டுக்கு எத்தனையோ குயில்கள் எசப்பாட்டு பாடும்.

அப்படி எசப்பாட்டு பாடிய ஒரு குயில் தான் 'குயில்'. ஆம் அவள் பெயரும் குயில் தான். ஏதோ ஊரிலிருந்து பஞ்சம் பிழைக்க வந்தவள். ஆத்தோரம் மண்வீடு கட்டி இருந்து ஊர்ப்பொன்னு, பெரிசுக ஆத்தக்கடக்க பரிசல் ஓட்டி வயித்த நிரப்பட்டும் என்று

வழி விட்டவரும் மலைச்சாமிதான்.
மலைச்சாமி ... ஊரிலயே உயர்ந்த மனிதன். செல்வத்திலுந்தான் .. செல்வாக்கிலுந்தான்.. செல்வாக்கில் உயர்ந்தது அவர் குணத்தால்.. செல்வத்தில் உயர்ந்தது எப்படி என்று பொன்னாத்தா தான் அடிக்கடி சொல்வாள்..

“அந்தாள் எனக்கு வாக்கப்பட்டு வரும் போது ஒரு துருப்பிடிச்ச துரட்டுக் கம்பியோடயும், பத்து வெள்ளாட்டோடயும் தான் வந்தாரு. அதான் அந்தாளு பரம்பர சொத்து.. செவக்க வேட்டி கட்டினதே எங்கப்பன் காசிலதான்.. அதான்... “
இப்படி வாயால் அடுக்குவாள் பொன்னாத்தா.

அத்தனை சொத்தும் பொன்னாத்தா அப்பன் சொத்துதான்.. ஆனால் சும்மா கொடுக்கவில்லை. கைமாறா கொடுத்தது. கௌரவக்கேடு விளையாமல் நடந்த அவசரத்திருமணம் மலைச்சாமி பொன்னாத்தா திருமணம்.

‘இந்த சிறுக்கி மக ஒரு தப்பு பண்ணிபுட்டன்.. இல்லேண்ணு சொல்லல.. ஒரு பொழுது ஒருத்தனோடு படுத்து எழுந்திருச்சன். புள்ளையோடு வந்தன்.. அதுக்காக உன் தலைல கட்டி வைச்சு ஆயுசுக்கும் தண்டனையா? ஆஸ்தி பாஸ்தியோட அறுபது பவுண் நகையோட இருந்த என்ன எங்கப்பன் துருப்பிடிச்ச துரட்டுக் கொம்பும் பத்து வெள்ளோடயும் வந்த உனக்கு..’

பொன்னாத்தா செய்த சின்னத்தவறு இதுதான். தந்தை வழிச்சொத்தின் பகுமானம் பேசி அவள் மூடி மறைக்க முயல்கிற உண்மையும் இதுதான். பொன்னாத்தாவின் தந்தை - தன் தாய் மாமன் காலில் விழுந்து மன்றாடியதால் தான் பொன்னாத்தாவை மணந்து கொண்டார் மலைச்சாமி. ஆனால் அன்றிலிருந்து மலைச்சாமி பொன்னாத்தாவிடம் வாய் திறந்ததில்லை. வாழ்ந்ததுமில்லை. ஊருக்காக ஒரு வாழ்வு .. பொன்னாத்தாவின் கணவனாக.. பொன்னாத்தா மகளிற்கு ஒரு தந்தையாக... பொன்னாத்தா பேரனிற்கு ஒரு தாத்தாவாக.... மற்றும்படி மலைச்சாமி வாழ்வென்பது பாட்டோடுதான்..





அவர் பாட்டிற்கு எசபாட்டு பாட வந்த குயில்தான் அவர் வாய்விட்டுப் பேசும் தோழியாகிறாள்.

ஒரு நாள் இப்படித்தான்... பொன்னாத்தா வீட்டில் ஒரு குருவி.. சிட்டுக்குருவி..
அந்தநேரம் பொன்னாத்தாவும் வீட்டில் இல்லை.. அதனால் குருவிய பார்த்த மலைச்சாமிக்கு பாட்டு வந்துவிட்டது.

“ஏ குருவி... சிட்டுக்குருவி...

ஒன் ஜோடி எங்க அதை கூட்டிக்கிட்டு
எங்க விட்டத்தில வந்து கூடு கட்டு
பொல்லாத வீடு...
கட்டு பொன்னான கூடு...
இப்போ பொண்டாட்டி இல்ல...
வந்து என்கூட பாடு..”
அந்நேரம் வீதி வழியாக மீன் விற்றுப் போகிற குயில் எசப்பாட்டு பாடுகிறாள்..

“ஏ குருவி......
ஐயா உள்ளத்திலே நல்ல அன்பு இருக்கு
ஆனா வீட்டுக்குள்ள.. கொஞ்சம் வம்பிருக்கு
பொண்டாட்டிக்காரி.... என்னன்னு பாப்பா
வந்து உன் கூட்ட பாத்தா..
ஹ.... ஹ....ஹ...
கொடக்கூலி கேப்பா..”

மலைச்சாமி - குயில் கதை நளினமும் ஏளனமுமாய் இப்படியே வளர்ந்தது. குயில் சாதி அடிப்படையில் மலைச்சாமியை நெருங்கமுடியாதவள். ஆனால் அவளை பொறுத்தவரை அவள் ஏழை வீட்டு மகாராணி..

‘நல்லா புழைச்ச காலத்திலயே போராவூரணி கோயிலில் பத்தாயிரம் பேருக்கு சோறு போட்டு காது குத்தி பேர் வெச்சாங்க.. என் பேரு குயிலு’ இது அவள் மிடுக்குடன் அடிக்கடி சொல்லும் வசனம்.

மலைச்சாமி - குயில் கதை என்ன விளக்கம் என்று அறிவது அவ்வளவு சாதாரணமானதல்ல. அதற்கிடையில் நாம் மலைச்சாமியின் மருமகன் கதையை கொஞ்சம் சென்று பார்ப்போம்.
செல்லக்கண்ணு அவன் பெயர். செருப்புத் தைக்கிற செங்கோடன் மகள் செவுளி மீது சொல்லக்கண்ணுக்கு காதல். சொல்லக்கண்ணுக்கு உறவென்பது தாய்மாமன் மலைச்சாமி தான். பொன்னாத்தாவிடம் ஏச்சு பேச்சு வாங்கி அவசரத்திற்கென்று இருக்கும் எடுபிடி தான் செல்லக்கண்ணு. அப்பாவி..

செல்லக்கண்ணு குழல் இசைப்பான். அவன் சோகம் குழல் வழியே..

சட்டைப்பொத்தான் கூடப் போடத் தெரியாத அவனிற்கு குழாய்ச்சட்டை போட்டு அழகு பார்க்க நினைக்கிறாள் செவுளி. சேர்த்து வைத்த பணத்திலே வாங்கிக் கொடுத்தாள். புது உடுப்பு போட்டுக் கொண்டு வீடு வந்தவனை பொன்னாத்தா கண்டுவிட்டாள். காணாமல் போன தனது இருபத்திரண்டு ரூபாதான் குழாய்ச்சட்டையா வந்து நிக்குது என்று நினைத்தவள் செல்லக்கண்ணுவ வெளுத்து வாங்கி விட்டாள்.

இருள் சூழ்ந்து விட்டது. ஆற்றங்கரை. அடி வாங்கிய செல்லக்கண்ணுக்கு கோபம். அடித்த பொன்னாத்தா மேலல்ல. போட்ட குழாய்ச்சட்டை மீதுமல்ல. வாங்கித்தந்த செவுளி மீதுதான்.

செவுளி என்ன சொல்லியும் அவன் சமாதானமாகவில்லை. ஆத்தோரமாய் நீரை பார்க்கிறாள். நீரில் நிலா... அப்படியே அள்ளி வந்து செல்லக்கண்ணு முன் நின்று

‘இத பாரய்யா... என் கூடதான் பேசமாட்டா.. உனக்கு பிடிச்சமான நிலாவ கொண்டு வந்து இருக்கன். அது கூடயாவது பேசய்யா..’

நிலவை ஊற்றினாள். காட்சியை முந்திக் கொண்டு இசை வந்தது..
“அந்த நிலாவ தான்
நான் கையில புடிச்சேன்
என் ராசாவுக்காக..

“எங்க எங்க
கொஞ்சம் நான் பார்க்குறேன்”

“கண்ணை மூடு

கொஞ்சம் நான் காட்டுறேன்"

செல்லக்கண்ணு செவுளி காதலும் சாதி வழக்கப்படி சேர்வதற்கு வாய்ப்பே இல்லாத காதல் தான். அது தெரிந்த இருவரும் ஊரை விட்டு ஓடிச்செல்ல முடிவெடுக்கிறார்கள். ஊர் தாண்டிப் போக பரிசல் வேண்டி குயிலிடம் வந்து நின்றனர். அவ்வேளை அருவாளோடு வந்த மலைச்சாமியின் கண்களில் அகப்பட்டுக் கொண்டனர்.

எப்படியோ அவர்களை வாழ விடும்படி மன்றாடுகிறாள் குயில்.. "கௌரவத்துக்காக இந்த சின்னஞ்சிறுசுகளை பிரிச்சு காலந்தோறும் அதுகள அழச் சொல்லுறீயா" எனக் குயில் கேட்ட கேள்வி மலைச்சாமியை குத்தியது. அந்தச் சிட்டுக் குருவிகளை பிரிக்க வேண்டாம் என்று முடிவெடுத்த மலைச்சாமி சாதி என்னும் கோட்டை அழித்து செல்லக்கண்ணு செவுளி திருமணத்தை தன் தலைமையிலேயே நடத்தி வைத்தார். நிலவின் கண்முன் நிகழ்ந்த அந்தக் காதல் அன்று வெற்றியும் கண்டது.

இனி மலைச்சாமி - குயில் கதை என்னவாகப் போகிறது? மலைச்சாமி பஞ்சாயத்தில பேசும் போது வாய் சிறிது தடுமாறினாலே மலைச்சாமி வீடுவர முதல் கதை பொன்னாத்தா காதிற்கு வந்துவிடும்.

குயில் கதை வராமலா இருக்கும்? திரித்து திரித்து ஊரெல்லாம் மலைச்சாமி குயில் விவகாரந்தான் பேசுபொருள்.

மலைச்சாமி வீடு வரும் போதெல்லாம் பொன்னாத்தா வாய்ப்பாட்டு மந்திரமும் இப்போது குயில் பற்றித்தான்...
ஆனால் மலைச்சாமிதான் பொன்னாத்தாவை எப்போதும் கண்டு கொண்டதில்லையே.. இப்போதும் கண்டு கொள்ளவில்லை.



ஊர் என்ன பேசினாலும் எதையும் கண்டு கொள்ளாமல் அந்த கிராமத்து வீதிகளில் நடந்து கொண்டே இருப்பார். நடிப்பதில் திலகம் என்று பெயரெடுத்தவர் நடப்பதில் எத்தனை அமைதியைக்

காட்டினார்.
ஊர் பேசுவது பேசட்டும் என தன் கௌரவத்தை இழக்காத நடை .. சலனமில்லாத நடை...

குயில் கூட ஒரு முறை மலைச்சாமியிடம் கேட்டாள்..
'இல்லை...' என்று அழுத்தமாக கூறிவிட்டு நடக்கத் தொடங்கினார் மலைச்சாமி.

குயிலின் மனது கீதம் இசைத்தது.

"பழச மறக்கலியே
பாவி மக நெஞ்சு துடிக்குது

உன்னையும் என்னையும் வச்சி
ஊரு சனம் கும்மி அடிக்குது

அடடா எனக்காக
அரும குறஞ்சீக

தரும மகாராசா
தலைய கவுந்தீக

அட கண்ணு காது
மூக்கு வச்சி
ஊருக்குள்ள பேச்சு.."

தன்னால் ஒரு களங்கம் மலைச்சாமிக்கு வந்ததை எண்ணுகையில் குயிலிற்கு வருத்தம் இருந்தாலும் மலைச்சாமி மீது தான் கொண்ட அன்பு மட்டும் சொல்லப்படாத ஓர் உண்மைதான்..



'என் புருசன வச்சிருக்கிறியா..?' என நடுத்தெருவில் நிறுத்தி வைத்து பொன்னாத்தா அடித்த போதும் கூட ஊரே கேட்க பொன்னாத்த சொன்ன சொல்தான் குயிலிற்கு ஒரு பூரிப்பை அளித்தது.

இருக்கட்டுமே.. இருந்தால் என்ன... மலைச்சாமி மட்டும் இதை

ஏற்க மறுக்கிறார். கௌரவத்திற்கு அஞ்சுகிறார். களங்கமென்று எண்ணுகிறார்.

“களங்கம் வந்தால் என்ன பாரு
அதுக்கும் நிலானு தான் பேரு
அட மந்தையில
நின்னாலும் நீ
வீரபாண்டி தேரு

ராசாவே
உன்ன நம்பி
இந்த ரோசாப்பு இருக்குதுங்க”

நிலவு மீண்டும் ஒரு காதலிற்கு சாட்சியாய் வந்து நிற்கிறது.

களங்கம் எத்தனை இருந்தாலும் முழு நிலவு - நிலவு தான் . ஒரு நிலவினை சாட்சியாக்கி காதலை சொல்லிவிட்டுப்போன ‘முதல் மரியாதை’ என்கிற திரைக்காவியத்தையே இதுவரை கதையளந்தோம் என்று சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

இந்த அவசரஉலகு கிராமங்களை அழித்து விடலாம். விளக்குகளை அணைத்துவிடலாம்..

ஆனால் நிலவை அணைக்க முடியுமா.. பூமியுள்ள காலம் வரை நிலவும் இருக்கும். நிலவுள்ள காலம் வரை மண்ணில் இது போன்ற கதைகளும் இருக்கும்.

நிலாக்காலங்கள் எல்லாம் விழாக்காலங்களாகவும் விரத காலங்களாகவும் கொண்ட நம்நாட்டவர் அனைவரிற்கும் சித்திரை முழுநிலவுத் திருநாள் மேலும் சிறப்பு சேர்க்கட்டும்.



# இரண்டரை வயது சிறுமியின் அசாத்திய ஆற்றல்

ஆயிரம் தமிழ் சொற்களுக்கு அதன் ஆங்கில அர்த்தங்களை சாதாரணமாக கூறி சாவகச்சேரியை சேர்ந்த இரண்டரை வயது சிறுமி ஒருவர் அசத்தியுள்ளர். சிறுமியின் குறித்த அசாத்திய திறனை கின்னஸ் சாதனை புத்தகத்தில் பதிவதற்கான முயற்சியில் பெற்றோர் ஈடுபட்டுள்ளனர்.

சாவகச்சேரியை சேர்ந்த ஜெயகரன் தர்ஷ்விகா என்ற இரண்டரை வயது சிறுமி காலநிலை, விலங்குகள், மின்னியல் சாதனங்கள், தொழில்கள் உள்ளிட்ட 1000 இற்கும் அதிகமான பெயர்களை தமிழில் கேட்கும் போது அவற்றுக்கான ஆங்கில அர்த்தங்களை மிகவும் அசாத்தியமாக கூறுகின்றார். தந்தையார் முச்சக்கர வண்டி ஓடுனராகவும் தாயார் குடும்ப பெண்ணாகவும் கொண்ட பெரிய அளவிலால பின்புலங்கள் இல்லாத குடும்த்தில் பிறந்த குறித்த குழந்தையானது இதுவரை ஏடு தொடக்கப்பாடாத நிலையில் இவ்வாறு அதிசிறந்த ஞாபக சக்தியை கொண்டுள்ளமையானது பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. குறித்த சிறுமியின் அசாத்திய ஆற்றலை உலக சாதனைப் புத்தகத்தில் பதியப்படுவதற்கான முயற்சியை பெற்றோர் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கட்டிடத்திற்குள் ஒரு நகரம்



சீனாவின் ஹாங்சோவில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் 30,000க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டு உலகம் அதிர்ச்சியடைந்தது. ஒரே கட்டிடத்தில் இவ்வளவு பேர் எப்படி வசிக்க முடியும், ஒரு கட்டிடத்தில் இவ்வளவு பேர் வசிக்க முடியும் என்பது கூட எப்படி சாத்தியம் என்று நினைத்துப் பார்ப்பது கடினம்.

இந்தக் கட்டிடம் ”ஜியாங்சியாங்லி அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம்” என்று அழைக்கப்படுகிறது. இது 25 மாடிகளைக் கொண்டுள்ளது மற்றும் 75 மீட்டர் உயரம் கொண்டது. இது 1990களில் கட்டப்பட்டது. இந்தக் கட்டிடத்தில் உள்ள சில அடுக்குமாடி குடியிருப்புகள் 12 சதுர மீட்டர் மட்டுமே, இது சிறியதாகவும் கூட்டமாகவும் உள்ளது. இந்தக் கட்டிடம் முதலில் 4,000 பேரை மட்டுமே தங்க வைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது, ஆனால் பல ஆண்டுகளாக, அந்த எண்ணிக்கை 30,000 க்கும் அதிகமாக வளர்ந்துள்ளது.



இந்தக் கட்டிடம் மிகவும் கூட்டமாக இருப்பதாலும், குளியலறைகள் அழுக்காக இருப்பதாலும், போதுமான அடிப்படை வசதிகள் இல்லாததாலும், அதில் வாழ்வது மிகவும் மோசமானது என்று மக்கள் கூறுகிறார்கள். கட்டிடம் மோசமான நிலையில் இருப்பதாகவும், உடைந்த சுவர்கள் மற்றும் குழாய்கள் கசிந்து வருவதாகவும் மக்கள் கூறுகிறார்கள்.

அது வாழ்வதற்கு நல்ல இடமாக இல்லாவிட்டாலும், அங்கு வசிக்கும் பலர்

வெளியேற விரும்புவதில்லை. அவர்களில் பலருக்கு, அவர்கள் இதுவரை வாழ்ந்த ஒரே இடம் அதுதான், மேலும் அவர்கள் அதை தங்கள் நகரமாக மாற்றியுள்ளனர். அங்கு வசிக்கும் பலர் அந்தக் கட்டிடத்தில் இருந்து சிறிய கடைகளையும் உணவகங்களையும் நடத்துகிறார்கள்.

ஜியாங்சியாங்லி அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்தில் இருப்பது போல சீனாவில் மட்டும் நிலைமை சீராக இல்லை. உலகம் முழுவதும் மக்கள் நெரிசலான அடுக்குமாடி கட்டிடங்கள் மற்றும் சேரிகளில் மோசமான சூழ்நிலையில் வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளதற்கு பல உதாரணங்கள் உள்ளன. இந்தப் பிரச்சினைகள் பெரும்பாலும் வறுமை, போதுமான மலிவான வீடுகள் இல்லாதது மற்றும் மோசமான நகர திட்டமிடல் ஆகியவற்றால் ஏற்படுகின்றன.

## மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் அறங்காவலர்சபையின் போற்றத்தக்க பணி

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தாசபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற மருத்துவமுகாமில் தெரிவுசெய்யப்பட்ட 7 பேருக்கு கண் அறுவை சிகிச்சைகள் இலவசமாக நடைபெற்றது. எமது தேவஸ்தானம் செய்து வருகின்ற அறப்பணிகள் போன்று ஏனைய ஆலயங்களும் செய்வது சமுதாயத்தில் ஆலயங்களுக்கான இருப்பை பல மடங்கு உறுதிப்படுத்தும் ஒரு வாய்ப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.





# நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவர் அரசுப் பணியில் சேர வழி உள்ளதா?

பல இளைஞர்கள் (பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட) மற்றவர்களின் தூண்டுதலால் அல்லது சூழ்நிலைகளை சரியாகப் புரிந்துகொள்ளாததால் அல்லது அறியாமையால் குற்றங்களில் சிக்கிக் கொள்கிறார்கள், மேலும் நீதிமன்ற விசாரணையின் பின்னர் அவர்கள் குற்றவாளிகள் என நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறார்கள்.

இதன் அடிப்படையில், எந்தவொரு குற்றத்திற்காகவும் நீதிமன்றத்தால் குற்றவாளியான ஒருவர், 2009/02/20 தேதியிட்ட 1589/30 எண் கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தல் 40 மற்றும் 41 விதிகளின்படி, அரசுப் பணியில் சேர்வதற்கு *தகுதியற்றவராக* கருதப்படுகிறார். எனவே, இதைப் பற்றி நன்கு புரிந்துகொண்டு நடவடிக்கை எடுப்பது முக்கியமான ஒன்றாகும் . குற்றம் நடந்தால், மூகுற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 306(1)* படி, நீதிமன்றத்தின் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் முன்னர் எந்த குற்றமும் இல்லாத நிலையில் நடவடிக்கை ஒனௌறை எடுக்குமாறு கோரிக்கை விடுப்பது புத்திசாலித்தனமானது.

## அரச வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட விதிகள்

விதி 40 - இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கு எதிரான குற்றத்திற்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்ட எந்தவொரு நபரும் அரசுப் பணியில் நியமனத்திற்கு தகுதியற்றவர்.



விதி 41- எந்தவொரு குற்றவியல் நடவடிக்கையிலும் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்ட அல்லது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 449 இன் கீழ் சுருக்கமான விசாரணைக்குப் பிறகு குற்றவாளியாகக் காணப்பட்ட எந்தவொரு நபரும் அரசுப் பணியில் நியமனத்திற்கு தகுதியற்றவர்.

முக்கியமான குறிப்பு

இந்த விதிகள் அரசுப் பணியில் சேர்வதைத் தடுக்கின்றன, ஆனால் சில விதிவிலக்குகள் அல்லது மன்னிப்புகள் குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் வழங்கப்படலாம். குறிப்பாக, சிறு குற்றங்கள் அல்லது முதல் முறை குற்றங்களுக்கு, நீதிமன்றம் குறிப்பிட்ட தண்டனைகளை விதித்து, பின்னர் தகுதியை மீண்டும் பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்கலாம்.

ஆலோசனை

* குற்றவியல் வழக்குகளில் சிக்கியிருந்தால், ஒரு சட்ட வல்லுநரை அணுகவும்.

* நீதிமன்றத்தில் மன்னிப்பு கோரி அல்லது சிறப்பு நிவாரணத்திற்கு விண்ணப்பிக்க முடியுமா என்பதை ஆராயவும்.

* அரசுப் பணியில் சேர்வதற்கான தகுதிகளை மீண்டும் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அரச சேவை ஆணைக்குழுவுடன் (Public Service Commission)தொடர்பு கொள்ளவும்.

இந்த விதிகள் கடுமையாக இருந்தாலும், நியாயமான நடைமுறைகள் மற்றும் சட்டரீதியான உதவிகள் மூலம், குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவர் தகுதியை மீண்டும் பெற முயற்சி செய்யலாம்.

(கௌரவ மஞ்சுல கருணாரத்ன ஐயாவின் பதிவின் தமிழ் மொழிபெயர்ப்பு)



# மின்னலும் மற்றும் இடியும் எவ்வாறு உருவாகிறது?

**மின்னல் (Lightning) என்றால் என்ன?**

மின்னல் என்பது வளிமண்டலத்தில் ஏற்படும் ஒரு திடீர் மின்சார வெளியீடு ஆகும். இது மேகங்களுக்கிடையே அல்லது மேகத்திலிருந்து தரையில் ஏற்படலாம். இது ஒளி மற்றும் வெப்பத்தை வெளியிடுகிறது.

**மின்னல் எவ்வாறு உருவாகிறது?**

**1.மேக உருவாக்கம்**

புயல் காற்று, ஈரம் மற்றும் வெப்பம் சேர்ந்து பெரிய குமிழ் மேகங்கள் (குமுலஸ் மேகங்கள்) உருவாகின்றன.

இந்த மேகங்களில் உறைந்த நீர்த்துளிகள் மற்றும் பனிக்கட்டிகள் மேலும் கீழும் மோதுகின்றன.

**2.மின்னூட்ட பிரிப்பு**

இந்த மோதல்களால், மேகத்தின் மேல் பகுதி நேர்மின்னூட்டம் (Positive Charge) பெறுகிறது.

கீழ் பகுதி எதிர்மின்னூட்டம் (Negative Charge)** பெறுகிறது.

**3.மின்னல் தோன்றுதல்:**

எதிர்மின்னூட்டம் தரையை நோக்கி (Positive Charge) கவரப்படுகிறது.

தரையில் இருந்து நேர்மின்னூட்டம் மேலே எழும்பி, மேகத்துடன் இணைகிறது.

இந்த இணைப்பு *மின்னல்* (Lightning) ஆக வெளிப்படுகிறது.



4.வெப்பம் மற்றும் ஒளி:
மின்னல் வழியே *30,000°C* வெப்பம் உருவாகி, பிரகாசமான ஒளி உண்டாகிறது.

இடி (Thunder) எவ்வாறு உருவாகிறது?
மின்னலின் வெப்பம் காரணமாக காற்று விரிவடைந்து, அதிவேக அதிர்வு அலைகள் உருவாகின்றன.

இந்த அதிர்வுகளே இடி (Thunder) என்று கேட்கப்படுகிறது. ஒளியின் வேகம் (Light) ஒலியை (Sound) விட வேகமாக இருப்பதால், முதலில் மின்னல் தெரிகிறது, பின்னர் இடி கேட்கிறது.

மின்னல் & இடிக்கு இடையே உள்ள வேகம்:

1 வினாடி தாமதம் = 343 மீட்டர் தூரம்.
உதாரணம்: மின்னல் தெரிந்த 3 வினாடிகளுக்குப்** பிறகு இடி கேட்டால், புயல் 1 கி.மீ தொலைவில் உள்ளது.

மின்னல் என்பது மின்சாரம், இடி என்பது அதன் வெப்பத்தால் உருவான ஒலி. இரண்டும் இயற்கையின் சக்தி வாய்ந்த நிகழ்வுகள்! ⚡ 🌩

எந்த பகுதிகள் அதிகம் மின்னல் & இடியால் பாதிக்கப்படுகின்றன?
மின்னல் மற்றும் இடி உலகம் முழுவதும் ஏற்படும் இயற்கை நிகழ்வுகள். ஆனால் சில பகுதிகள் *அதிக அபாயத்தில்* உள்ளன:

1. வெப்ப மண்டலப் பகுதிகள் (Tropical Regions)
-இந்தியா குறிப்பாக கேரளா, மேற்கு வங்கம், ஒடிசா, ஆந்திரா, தமிழ்நாடு (குறிப்பாக மலைப்பகுதிகள்).

அமெரிக்கா:புளோரிடா, டெக்சாஸ் (USA), பிரேசில்.
ஆப்பிரிக்கா:கொங்கோ, டான்சானியா.

2. மலைப்பகுதிகள்*
மலைகள் மேகங்களை மோத வைத்து மின்னலை அதிகரிக்கின்றன.
-உதாரணம்: ஹிமாலயப் பகுதிகள்,



3. கடலோரப் பகுதிகள்*
கடல் ஈரப்பதம் மற்றும் வெப்பம் மின்னலை அதிகரிக்கிறது.
உதாரணம்: சென்னை, மும்பை, வங்காள விரிகுடா. இலங்கை கரையோரம்

## மின்னல் & இடியிலிருந்து பாதுகாப்பு எப்படி?

### ⚡ வெளியில் இருந்தால்:

1.உயரமான மரம்/கட்டிடத்தின் அருகே நில்லாதீர்கள மின்னல் உயரமான இடத்தைத் தாக்கும்.
2.திறந்த வெளியில் (வயல், கடல்) இருந்தால், குனிந்து உட்காருங்கள் தரையில் குறைந்த உயரமாக இருங்கள்.
3. உலோகப் பொருட்களைத் தொடாதீர்கள் (கைப்பேசி, கைக்கடிகாரம், விளையாட்டு சாதனங்கள்).
4. நீரில் (குளம், கடல்) – நீர் மின்சாரத்தை விரைவாக கடத்தும்.


### 🏠 வீட்டில் இருந்தால்:

1. மின்சார சாதனங்களை (TV, கணினி) பிரித்து வைக்கவும்.
2. ஜன்னல்கள் மற்றும் கதவுகளை மூடவும்.
3.தொலைபேசி/மொபைல் பயன்பாட்டைக் குறைக்கவும்.
4. மின்னல் தடுப்பான் (Lightning Arrester) பொருத்தவும்.

-முக்கியமான எச்சரிக்கைகள்:
❌ மரத்தடியில் நிற்காதீர்கள்** (மின்னல் அதிகம் தாக்கும்).
❌ மோட்டார் சைக்கிள்/சைக்கிளில் பயணிக்காதீர்கள்
❌ கம்பிகள் அல்லது உலோகக் குழாய்களைப் பிடிக்காதீர்கள்.

"30-30 விதி – மின்னல் தெரிந்த *30 வினாடிகளுக்குள்* இடி கேட்டால், உடனே பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுங்கள். மழை நின்று *30 நிமிடம்* காத்திருக்கவும்.

மின்னல் இயற்கையின் சக்தி வாய்ந்த நிகழ்வு – ஆனால் எச்சரிக்கையாக இருந்தால் பாதுகாப்பாக இருக்கலாம்!



# சிரிப்பு மருத்துவர் சார்லி சப்ளின்

வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டு போகும் என்பார்கள் அப்படிப்பார்த்தால் நம்மை வாய்விட்டு சிரிக்க வைப்பவர்களை மருத்துவர்களுக்கு சமம் என்று சொல்லலாம். உலகில் அதிக மக்களை சிரிக்க வைத்த நபர் யார் என்று கேட்டால் ஒரே ஒரு நபரைத்தான் வரலாறு புன்னைகையுடன் உதிர்க்கும். அவர்தான் ஈடு இணையற்ற ஆங்கில நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் (Charlie Chaplin).

இன்று திரைப்படங்களில் வசனங்களை கேட்டு சிரிக்கிறோம் ஆனால் ஊமைப்படங்கள் மட்டுமே வெளிவந்த ஒரு கால கட்டத்தில் மொழியின் துணையின்றி வசனம் எதுவும் பேசாமல் தன் உடல் அசைவுகளாலே ரசிகர்களை வயிறு குலுங்க சிரிக்க வைத்தவர்தான் சார்லி சாப்ளின். பல்லாயிரக்கணக்கான திரை ரசிகர்களுக்கு “நகைச்சுவை“ எனும் மருந்து தந்த அந்த மாபெரும் கலைஞனின் வாழ்க்கை எவ்வளவு சோகம் நிறைந்தது தெரியுமா? சோகத்திலும் சிரித்த அந்த உன்னத கலைஞனின் கதையைத் தெரிந்துகொள்வோம்.

1889-ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ந்தேதி லண்டனில் பிறந்தார் சார்ல்ஸ் ஸ்பென்சர் சாப்ளின், அவரது பெற்றோர்கள் மேடை இசை கலைஞர்கள், மிகவும் ஏழ்மையான நிலையில் இருந்தவர்கள். மேடைக்கச்சேரிகளில் சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் குடித்தே தீர்த்தார் தந்தை அதன் பலன் நடக்க பழகும் முன்பே நடனமாடவும் பாட்டு பாடவும் கற்பிக்கப்பட்டான் சிறு வயது சாப்ளின். 5



வயதே ஆனபோது சார்லி சாப்ளினின் முதல் மேடை அரங்கேற்றம். தாய் நோய்வாய்ப்பட்டதால் பையனை மேடைக்கு தள்ளினார் தந்தை மிரண்டுபோன சாப்ளின் மேடையில் ஏறி தனக்குத்தெரிந்த ஒரே பாடலை திரும்ப திரும்ப பாடினார் அதனால அவரை மேடையிலிருந்து இழுத்துச்செல்லும் நிலைமை ஏற்பட்டது.

அடுத்து தந்தையும் தாயும் பிரிந்தனர். குடித்து குடித்தே தந்தை இறந்து போனார். தாயாருக்கு அடிக்கடி உடல் நலமின்றி போனது சாப்ளினும் அவரது அண்ணன் சிட்னியும் அநாதை இல்லத்தில் சேர்க்கப்பட்டனர். 7 வயதானபோது சாப்ளின் ஒரு இசைக்குழுவில் சேர்ந்து பணியாற்றினார் ஆனால் அந்த குழு ஓராண்டில் கலைக்கப்பட்டது. அண்ணன் சிட்னி கப்பலில் வேலை பார்க்க சென்று விட்டதால் சில ஆண்டுகளை தனிமையில் கழித்தார் சாப்ளின். 14-ஆவது வயதில் ஒரு மேடை நாடகத்தில் நடிக்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. அதனை நன்கு பயன்படுத்திக்கொண்டார். பத்திரிகைகள் அவரது நடிப்பை பாராட்டின. பின்னர் சாப்ளினும் அண்ணன் சிட்னியும் புகழ்பெற்ற /பெட்கானோ குழுவில் சேர்ந்தனர் அந்த குழு அமெரிக்காவுக்கு சென்று மேடை நாடகங்களை நடத்தியது. அதில் நடித்த சாப்ளின் பெயர் திரையுலகத்தின் கவனத்தை ஈர்த்தது.

1913 ஆம் ஆண்டு 24 ஆவது வயதில் “கி ஸ்டோன் பிலிம் ஸ்டுடியோ’ என்ற அமெரிக்க திரைப்பட நிறுவனம் சாப்ளினுக்கு நல்ல வாய்ப்பை வழங்கியது. சாப்ளின் அமெரிக்காவுக்கு குடி பெயர்ந்தார். “மேக்கிங் எ லிவிங்" என்ற தனது முதல் திரைப்படத்தில் ஒரு கருப்பு கோட்டும் பெரிய தொப்பியும் நீர் யானை மீசையும், கண்ணாடியும் அணிந்து நடித்தார் பின்னாளில் அதுவே சாப்ளினின் அடையாளமானது. தனது 25 ஆவது வயதிலேயே “20 minutes of love'' என்ற முதல் படத்தை இயக்கினார் சாப்ளின் அதன்பிறகு பல படங்கள் அவரது





கைவண்ணத்தில் உருவாகின. தனது எல்லா படங்களிலும் எல்லோரையும் சிரிக்க வைத்த சாப்ளினின் திருமண வாழ்வில் கசப்புக்கு மேல் கசப்பு ஏற்பட்டது.

1918 ஆம் ஆண்டு 16 வயது நடிகை மேன்றோ ஹெரிசை காதலித்து மணந்து கொண்டார் அடுத்த ஆண்டு அவர்களுக்கு பிறந்த குழந்தை மூன்றே நாட்களில் இறந்து போனது. பின்னர் இருவரும் விவாகரத்து செய்து கொண்டனர். 1924 ல் மீண்டும் ஒரு நடிகையை இரண்டாவது முறையாக திருமணம் செய்து கொண்டார் இரண்டு குழந்தைகள் பிறந்தாலும் அந்த திருமணம் மூன்று ஆண்டுகள்தான் நீடித்தது. அதன் பின்னர் பாலத் கடாட் என்ற நடிகையை மணந்து கொண்டு அவரையும் விவாகரத்து செய்தார். இறுதியாக உனா உனில் என்ற பெண்ணை மணந்துகொண்ட பின்னர்தான் ஏழு பிள்ளைகளை பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்தார் சாப்ளின்.

சாப்ளினின் முதல் முழு நீள திரைப்படமான “தி கிட்“ 1921ல் வெளிவந்தது தனது ஆரம்ப வாழ்கையை அதில் சித்தரித்திருந்தார் அதனால் அந்த படம் மிகப்பெரிய வெற்றி பெற்று சாப்ளினுக்கு பெரும் புகழை சேர்த்தது. 1925ல் “தி கோல்ட் ரஷ்“ என்ற அவரது படம் வெளியாகி சாப்ளினின் புகழை புதிய உச்சத்துக்கு கொண்டு சென்றது அந்த படத்தின் மூலம்தான் நான் நினைவு கூறப்பட விரும்புகிறேன் என்று அவரே ஒருமுறை கூறியிருக்கிறார். அதன் பிறகு பல புகழ்பெற்ற படங்களை தந்தார் சாப்ளின் பல ஆண்டுகள் அமெரிக்காவில் இருந்தும் அவர் பிரிட்டிஷ் குடியுரிமையை விட்டு கொடுக்க வில்லை மேலும் அவர் கம்யுனிஷ்டுகளை ஆதரிப்பவர் என்ற சந்தேகம் அமெரிக்காவில் நிலவியது அந்த சந்தேகம் அவரது வாழ்க்கையை திசை திருப்பியது.

1951 ல் “தி லைம் லைட்" என்ற புகழ்பெற்ற படத்தை தந்த சாப்ளின் அது வெளியான பிறகு தனது மனைவி பிள்ளைகளுடன் விடுமுறைக்காக இங்கிலாந்து சென்றார் அந்த சந்தர்பத்தை பயன்படுத்தி சாப்ளின் இனி மீண்டும் அமெரிக்காவுக்கு நுழைய முடியாது என்று அறிவித்தது அமெரிக்க அரசாங்கம் "Los Angeles walk of fame" என்ற நட்சத்திர பட்டியலில் இருந்து சாப்ளினின் பெயர் நீக்கப்பட்டது.



ஆனால் மனம் தளராத சாப்ளின் சுவிட்ஷ்ர்லாந்தில் குடியேறி தொடர்ந்து படம் செய்ய ஆரம்பித்தார். 1964 ஆம் ஆண்டு தனது சுய சரிதையை வெளியிட்டார். 1967 ல் அவர் இயக்கிய கடைசிப்படம் வெளிவந்தது 1972 ஓர் அதிசயம் நிகழ்ந்தது திரைத்துறையில் பல உன்னத படைப்புகளை தந்தவர் என்பதையும் மறந்து எந்த தேசம் அவரை தனது எல்லைக்குள் மீண்டும் நுழைய கூடாது என்று கட்டளையிட்டதோ அதே அமெரிக்க தேசம் 20 ஆண்டுகள் கழித்து சாப்ளினை மீண்டும் திறந்த கைகளுடன் வரவேற்றது.

அதே ஆண்டில் அவருக்கு அமெரிக்காவில் அகாடமி விருது விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது அதோடு 'Los angeles walk of fame'' என்ற நட்சத்திர பட்டியலில் இருந்து சாப்ளினின் பெயர் மீண்டும் சேர்க்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு தனது இரண்டாவது புத்தகத்தை வெளியிட்டார் சாப்ளின் அதற்கு அடுத்த ஆண்டு அவருக்கு “சர்“ பட்டம் வழங்கி கவுரவித்தார் எலிசபெத் ராணியார். 1977 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று தனது 88-ஆவது வயதில் காலமானார் சார்லி சாப்ளின். அதுவரை சார்லி சாப்ளினை பார்த்து சிரிக்க மட்டுமே கற்றுக் கொண்டிருந்த உலகம் அன்று அவரை பார்த்து முதன் முறையாக அழுதது.

”உண்மையாக சிரிக்க வேண்டுமென்றால் உங்கள் வலியை வைத்துக்கொண்டு நீங்கள் விளையாட வேண்டும், வலிக்கு உண்மையான நிவாரணமும் சரியான ஊட்ட மருந்தும் சிரிப்புதான்” என்று கூறுகிறார் சாப்ளின். அதை கூறியது மட்டுமல்ல அதனை வாழ்ந்தும் காட்டினார். இன்று வாய்விட்டு சிரிக்க நினைக்கும் மில்லியன் கணக்கானோர் சார்லி சாப்ளினின் பழைய படங்களை பார்க்கின்றனர். இது ஒன்றே அந்த மாபெரும் கலைஞன் இந்த உலகிற்கு விட்டு சென்றிற்கும் மாபெரும் சொத்தாகும்..


# மாவைக் கந்தவேள் பெருமானுக்கு 50 ஆண்டுகளின் பின் குடமுழுக்கு



50 ஆண்டுகள் கழித்து, 2025 ஏப்ரல் 11 ஆம் தேதி பங்குனி உத்திர தினத்தில், மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தானத்தில் மஹா கும்பாபிஷேகம் மிகவும் விமரிசையாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெற்றது.



இந்த புனித நாளில், இந்தியாவின் பல்வேறு ஆதீனங்களும், ஈழத்து சமயப் பெரியவர்களும், சிவாச்சாரியர்களும் பங்குபற்றியமை விசேட அம்சமாகும். மாவைக் கந்தவேளின் அருளைப் பெற பலர் திரளாக வந்து பக்தி பூர்வமாக கலந்து கொண்டனர்.







# ஈழத்தில் பல இடங்களில் நடைபெற்ற யோகசுவாமிகள் குருபூசை விழா



யோகசுவாமிகள், ஈழத் தமிழரின் ஆன்மிக வாழ்வில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்திய அருட்குருவாக அறியப்படுகிறார். அவரது குருபூசை ஆண்டுதோறும் பக்தியுடன் நினைவுகூரப்படும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

குறிப்பாக, யோகசுவாமிகளின் சமாதி அமைந்துள்ள கொழும்புத்துறை யோகசுவாமிகள் திருக்கோயிலிலும், அவரின் சீடராக விளங்கிய ஹவாய் சுப்பிரமுனியசுவாமிகள் நிறுவிய அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்திலும், தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்திலும் குருபூசை நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றது. யோகர் சுவாமிகள் பற்றிய சிந்தனைகள் இங்கே பரிமாறப்பட்டு, அவரது நற்சிந்தனை பாடல்கள் பாராயணம் செய்யப்பட்டது.








# எதிர்காலத்தைக் கணிக்கும் அறிவு உண்மையா?



Precognition (முன்கணிப்பு) என்பது எதிர்கால நிகழ்வுகளை முன்கூட்டியே தெரிந்துகொள்வது அல்லது கணிப்பது என்று கூறப்படும் புலன் கடந்த புலக்காட்சி (Parapsychology) சார்ந்த ஒரு எதிர்மறையான மற்றும் ஆர்வமூட்டும் கருத்தாகும். இதன் மூலமாக, ஒரு மனிதன் எந்த அறிவியல் கருவிகளின் உதவியுமின்றி, நிகழாத விஷயங்களை முன்னரே அறிந்து கொள்ள முடியும் என நம்பப்படுகிறது.

Precognition என்பது அறிவியலும் ஆச்சரியமும் கலந்த மிடுக்கான ஒரு ஆய்வுப் பொருளாகத் தொடர்ந்து ஆராயப்பட்டு வருகிறது. இதைப் பற்றிய சில ஆச்சரியமான தகவல்கள் இங்கே:

வரலாற்றுச் சம்பவங்கள்

▪Abraham Lincoln-d; Precognitive Dream

அமெரிக்காவின் 16வது ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன், தனது கொலைக்கு முன் சில நாட்களுக்கு, ஒரு கனவைப் பார்த்ததாகக் கூறப்படுகிறது.

அவர் தனது கனவில், வெள்ளை மாளிகையின் உள்ளே ஒரு உடல் கிடப்பதைப் பார்த்ததாகவும், மக்கள் ”ஜனாதிபதி கொல்லப்பட்டார்” என அழுவதை கேட்டதாகவும் கூறினார்.

சில நாட்களில் அவர் Wilkes Booth என்பவரால் கொல்லப்பட்டார்.

▪ Titanic விபத்து

1912ல் டைட்டானிக் கப்பல் மூழ்குவதற்கு முன்பு, சிலர் கனவுகளில்



அல்லது மனத்தில் இதை உணர்ந்ததாகக் கூறியுள்ளனர்.

பிரபலமான எழுத்தாளர் Morgan Robertson தனது ”Futility, or the Wreck of the Titan” (1898) என்ற புத்தகத்தில், டைட்டானிக் போன்ற ஒரு கப்பல் மூழ்கும் சம்பவத்தை முன்கூட்டியே எழுதியிருந்தார்!

Precognition என்பது உண்மையில் உள்ளுணர்வான (Subconscious) தகவல் செயலாக்கத்தின் விளைவை மட்டுமே என்று சில உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஒருவர் கடந்த அனுபவங்களின் அடிப்படையில் எதிர்கால நிகழ்வுகளை அனுமானிக்கலாம்.
Precognition என்பது ஏதேனும் ஒரு விபத்தைக் கணிக்கவேண்டிய ஆற்றல் மட்டுமல்ல் இது அன்றாட வாழ்க்கையிலும் சில நேரங்களில் அனுபவிக்கப்படுகிறது.

நீங்கள் ஏற்கனவே ஒரு நிகழ்வை அனுபவித்திருப்பது போன்ற உணர்வு ஏற்படுவதை Deja Vu என்று அழைக்கலாம்.

## Unexpected Intuition:

சிலர் எந்த காரணமும் தெரியாமல் ஒரு விஷயத்தைத் தவிர்ப்பதோ, ஒரு பாதையை மாற்றுவதோ செய்யலாம், பின்னர் அது அவர்களை ஒரு அபாயத்திலிருந்து பாதுகாத்திருக்கலாம்.

இது Precognition-இன் ஒரு இயற்கையான வடிவமாக இருக்கலாம்.

Precognition உண்மையாக உள்ளதா என்பதை சோதிக்க, சில பயிற்சிகள் செய்யலாம்:

## Zener Card Test

1930களில் J.B. Rhine உருவாக்கிய இந்த முறை, தனிப்பட்ட



Precognition திறனை சோதிக்க உதவுகிறது.

ஒரு கார்டை உங்கள் முன்னால் வைத்துவைத்து, அதன் உருவத்தைக் (நட்சத்திரம், வட்டம், அலை போன்றவை) கணிக்க வேண்டும்.

- Dream Journaling

உங்கள் கனவுகளை ஒரு குறிப்பேடு வைத்துப் பதிவுசெய்து, அவை எதிர்கால நிகழ்வுகளுடன் பொருந்துகிறதா என்பதை பாருங்கள்.

பலரும் Precognitive Dreams என்பது உண்மையாக இருக்கலாம் என நம்புகிறார்கள்.

சிலர் தங்கள் மரணத்திற்கு முன்பே அதைப் பற்றிய ஒரு உணர்வை அனுபவிக்கிறார்கள்.

பிரபலமான ஓவியர் Mark Twain தனது நண்பரின் மரணத்தை முன்கூட்டியே கனவில் பார்த்ததாகக் கூறினார்.

9/11 தாக்குதலுக்கு முன்பு, பலர் அந்த நாளில் பணி செல்லாமல் இருந்ததாக கூறப்படுகிறது.

முடிவுரை

Precognition என்பது முழுமையாக அறிவியல் ஆதரிக்க முடியாத, ஆனால் முழுவதுமாக மறுக்கவும் முடியாத ஒரு புதிராகவே உள்ளது. சிலர் இதை உண்மையான திறனாக நம்புகிறார்கள், மற்றவர்கள் இது மனஉணர்வு மற்றும் தகவல் செயலாக்க பிழைகளால் ஏற்படும் ஒரு விளைவு என கருதுகிறார்கள்.

நீங்கள் Precognition அனுபவித்ததுண்டா? உங்கள் கனவுகள் எதிர்காலத்தை நிஜமாக்கியதுண்டா?

யோகராசா பௌயா
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்



# சுதேசி கப்பல் நிறுவனத்தை வ.உ.சி உருவாக்கியது எப்படி?

கப்பலோட்டிய தமிழன் என்று பெருமையுடன் நினைவுகூறப்படக் கூடிய வ.உ.சிதம்பரனார், அவரது காலத்தில் கப்பல் என்பது வணிகத்தின் அச்சாணியாக இருந்தது என்பதைக் கண்டடைந்தார். பிரிட்டி` ஆதிக்கவாதிகளின் பெரும் வணிகம் இந்த கப்பலின் என்பதை அறிந்த வ.உ.சி சுதேசி கப்பல் என்பதை தற்சார்பு பொருளாதாரத்தின் வடிவமாகவே முன்னெடுத்தார்.

வ.உ.சி-க்கு முந்தைய இந்திய கப்பல் கம்பெனிகள்

அன்றைய தூத்துக்குடியிலிருந்து கொழும்புவிற்கு தினமும் பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நேவிகேசன் கம்பெனியின் கப்பல்கள் சென்று கொண்டிருந்தது. சில இந்தியர்களும் கப்பல் நடத்திக் கொண்டிருந்தனர். 1884-ம் ஆண்டு கொல்கத்தாவில் ஜானகி நாத் உள்நாட்டு நதிப் போக்குவரத்து நாவாய் சங்கத்தைத் தொடங்கினார். அவருக்கு சொந்தமாக சரோஜினி, பாக்யலட்சுமி, ஸ்வதேசி, பாரத், லார்டரிப்பன் எனும் ஐந்து கப்பல்கள் இயங்கியது.

பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியின் பல்வேறு சதிகளுக்கு, அரசின் ஆதரவு இருந்தாதல் சுதேசிக் கப்பல் கம்பெனியின் முதல் முயற்சி முறியடிக்கப்பட்டது. அடுத்து 1897-ல் கிழக்கு வங்க நதிப் போக்குவரத்து கப்பல் கம்பெனி தோன்றியது. 1906 முதல் 1908 வரையிலான ஆண்டுகளில் இது வீறுபெற்று நடந்தாலும், பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியின் சதியினால் வீழ்த்தப்பட்டது.



தனுஷ்கோடி ராசு என்ற இந்திய கிறித்துவப் பணக்காரர் பொதுமக்கள் நலனுக்காக 1890-ம் ஆண்டு பிரிட்டிஷ் கப்பலுக்கு எதிராக தமிழ்நாட்டில் கப்பல் விட்டார்.

பிரிட்டி‘ கடல் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஆதங்குடி செட்டியார் குடும்பத்தினர் தமிழ்நாட்டுக்கும் ஆந்திராவிற்கும் இடையில் ந.மு கம்பெனி என்ற பெயரில் சரக்கு கப்பல் கம்பெனி நடத்தினர்.
அதேபோல நாகப்பட்டினத்திற்கும் காக்கிநாடாவிற்கும் இடையில் சி.வ கப்பல் கம்பெனி என்ற பெயரில் சி.வ.நல்லபெருமாள் பிள்ளையின் கப்பல் ஒன்று பிரிட்டிஷ் இந்தியா கம்பெனிக்கு எதிராக ஓடியது. இந்த கப்பல் கம்பெனியின் படகுகள் மீது தொடர்ச்சியாக தங்கள் கம்பெனியின் படகுகளை மோதவிட்டு நஷ்டம் ஏற்படுத்தும் வேலையை பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி செய்தது. இன்னும் பல இடைஞ்சல்கள் செய்து அந்த கம்பெனியை மூடினர்.

இந்த கம்பெனிகள் அனைத்தையும் பிரிட்டிஷ் அரசு ஒடுக்கிய விதங்களைப் பார்க்கும்போது, உள்நாட்டில் உள்ள அனைத்து தொழில் முயற்சிகளையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒடுக்க நினைத்து செயல்பட்டது தெரியவருகிறது.
பிரிட்டிஷாரின் சதியை உடைத்து சுதேசி கப்பல் நிறுவனத்தை உருவாக்க முயன்றார் வ.உ.சி. இவையனைத்தும் நாட்டு மக்களிடம் வெள்ளையர் மீதான வெறுப்பையும், கோபத்தையும் ஏற்படுத்தியது. தங்களுக்கென்று ஒரு தனி கப்பல் நிறுவனம் வேண்டும் என்று தமிழக வியாபாரிகள் நினைக்கத் துவங்கினர்.
இதனை வ.உ.சி,
”நமது சுதேசம் ஷேமத்தையடைந்து முன்னாளின் மேலான நிலைமைக்கு வருவதற்கு சகல தொழில்களிலும் வியாபரங்களிலும் மிக்க லாபத்தைக் கொடுப்பதான கப்பல் நடத்தும் தொழிலை நாம் கைக்கொள்வதே முக்கிய சாதனமாகும்”
என்று எழுதினார்.
கப்பல் நிறுவனம் மட்டுமல்ல பின்னாளில் சுதேசி நூல் ஆலைகள் உருவாக்கும் எண்ணமும் அவருக்கு இருந்தது. இவை அனைத்தும் பிரிட்டிஷாரை வெளியேற்றுவதற்கான வழிகள் என்றும் வ.உ.சி திட்டமிட்டிருந்தார்.

சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் பங்குகள் மற்றும் நிதி திரட்டல்

வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவு நாளான அக்டோபர் பத்தாம் நாள் 1906-ம் ஆண்டு சுதேசி கப்பல் நிறுவனம் பதிவு செய்யப்பட்டது. 25 ரூபாய் விலை வைத்து 40,000 பங்குகள் வழியாக பத்து லட்சம் ரூபாய் நிதி திரட்ட திட்டமிட்டனர். சென்னையில் அலுவலகம் எடுத்து கப்பல் நிறுவனம் இயங்கியது. பாலவநத்தம் ஜமீன்தார் பாண்டித்துரை தேவர் 2000 பங்குகளை வாங்கினார். கே.வி.ராகவாச்சாரி, கந்தசாமி கவிராயர் என்று பலரும் தீவிரமாக பங்குகளைத் திரட்டினர். பம்பாயிலும் கல்கத்தாவிலும் பங்குகள் திரட்டப்பட்டன.

பம்பாய் பெரும் வணிகர் கே.ஜெ.முகம்மது பக்கீர் சேட், கப்பல் நிறுவனத்தின் 8000 பங்குகளை வாங்கினார். சுதேசி கப்பல் நிறுவனத்தின் முதலீட்டில் மூன்றில் ஒரு பங்கு இசுலாமியர்கள் கொடுத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. வ.உ.சி விடுத்த அறைகூவல் பாண்டித்துரை தேவரை தலைவராகக் கொண்டு கப்பல் நிறுவனம் இயங்கத் தொடங்கியது. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பை முதல் நோக்கமாகக் கொண்டு கூட்டுறவு முறையில் உருவாக்கப்பட்ட முதல் கப்பல் நிறுவனமான இது வ.உ.சி-யின் அரும்பெரும் முயற்சியில் விளைந்துதான்.

ஏனென்றால் “நமது சுதேசத்தை அந்நிய நாட்டார் கைப்பற்றிக் கொள்வதற்கு ஏதுவாக இருந்ததும், நம் தேசத்து பொருட்களையெல்லாம் அந்நிய நாட்டான் கொண்டு போவதற்கு ஏதுவாய் இருந்ததும், நமக்கு மிக்க லாபத்தை தரக்கூடிய கைத்தொழில் வியாபாரம் எல்லாம் அந்நிய நாடுகளுக்குக் கொண்டுபோவதற்கு ஏதுவாக இருந்ததும், அன்னிய நாட்டார் நம் தேசத்தின் மீது பிரவேசித்து நாம் நீடித்த நாளாகக் கைக்கொண்டிருந்த கப்பல் தொழிலை நம்மிடமிருந்து கைப்பற்றிக் கொண்ட தொன்றே. ஆதலால் நாம் அதி சீக்கிரமாகவும், அதிகமாகவும் கைக்கொள்ளத் தக்கதும் கைக்கொள்ள வேண்டியதுமான தொழில் கப்பல்கள் நடத்துவதே”
என்று அறைகூவல் விடுத்து இந்த காரியத்தை செய்து முடித்தவர் அவரே.

துவக்கத்தில் வாடகைக்கு எடுக்கப்பட்ட கப்பல்

துவக்கத்தில் கப்பல் நிறுவனத்திற்கு சொந்தமாக கப்பல் இல்லை.

ஷாலேன் ஸ்டீமர்ஸ் கம்பெனியிடமிருந்து கப்பல்களை வாடகைக்கு எடுக்க வேண்டியதாக இருந்தது. சுதேசி கப்பல் நிறுவனத்தை ஆரம்பத்திலேயே ஒடுக்க நினைத்த பிரிட்டிஷ் இந்திய ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியானது ஷாலேன் ஸ்டீமர்ஸ் கம்பெனியை வாடகைக்கு கப்பல் தரவிடாமல் தடுத்தது. அந்த நிறுவனம் கப்பல்களை வாடகைக்குக் கொடுக்கும் ஒப்பந்தத்தையும் ரத்து செய்தது. உடனடியாக வ.உ.சி கொழும்பு சென்று வேறு ஒரு கப்பலை வாடகைக்கு எடுத்து வந்தார். ஆனாலும் சொந்தமாக கப்பல் வேண்டும் என்பதால் வ.உ.சி வட இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டார்.

சொந்த கப்பல்

“திரும்பினால் கப்பலுடன்தான் திரும்புவேன், இல்லையெனில் கடலில் விழுந்து மாண்டு போவேன்”, என்று சூளுரைத்துச் சென்றார் வ.உ.சி. அதன்பிறகு ’எஸ்.எஸ். காலியோ’ என்ற கப்பலுடன் திரும்பினார். சுதேசி கப்பல் நிறுவனம் மெதுமெதுவாக வளர்ந்தது. மக்கள் சுதேசிக் கப்பலிலேயே பயணம் செய்தனர். வணிகர்கள் தங்கள் சரக்குகளை சுதேசிக் கப்பலிலேயே அனுப்பினர். பிரிட்டிஷ் இந்திய கப்பல் நிறுவனம், சுதேசிக் கப்பலுடனான போட்டியை சமாளிக்க முடியாமல் கட்டணத்தைக் குறைக்க முடிவு செய்தது. கடைசியில் இலவசமாக அழைத்துச் செல்வதாகக் கூறியது.




அன்றைய பிரிட்டிஷ் அரசானது ’பிரிட்டிஷ் இந்தியா’ கப்பல் நிறுவனத்திற்கு ஆதரவாக மட்டுமல்ல, சுதேசி கப்பலுக்கு எதிராகவும் பல சதிகளில் ஈடுபட்டது. பிரிட்டிஷ் கப்பலில் மட்டுமே பயணம் செய்ய வேண்டும் என்று அரசு அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பியது.

கடற்சுங்க அதிகாரிகள், சுகாதார முறைகளை மேற்கொள்ளும் டாக்டர்கள், துறைமுக அதிகாரிகள் அனைவரும் ஒட்டு மொத்தமாகவும், தனித்தனியாகவும் சுதேசிக் கப்பலில் பயணம்



செய்யும் பயணிகளுக்கு பல வழிகளில் தொல் லைகளைக் கொடுத்து, அவர்களது பயணத்தில் தொடர்ந்து வெறுப்புணர்வை உருவாக்கி வந்தார்கள்.

கோரல்மில் தொழிலாளர்களின் போராட்டத்தின் போது, சுதேசிக் கப்பல் நிறுவனத்தில் புகுந்து கலெக்டர் ஆஷ் தாக்குதல் நடத்தினார். வ.உ.சி-யும் சிறையில் அடைக்கப்பட்டதால் கப்பல் நிறுவனம் மூடப்பட்டது. வ.உ.சி தனது சுயசரிதையில் தான் சிறைப்பட்டதற்கும், சுதேசி கப்பல் நலிவடைந்ததற்கும் கலெக்டர் ஆஷ் தான் காரணம் என்று பதிவு செய்துள்ளார்.

தற்சார்பு பொருளாதாரத்தின் மாதிரியாக சுதேசிக் கப்பல்

அந்நியத் துணி எதிர்ப்பு, அந்நியக் கப்பல் எதிர்ப்பு, தொழிலாளர் போராட்டம் என அனைத்து போராட்டங்களையும் தேச விடுதலை எனும் ஒரு இலக்கை நோக்கிய பயணமாக வ.உ.சி ஒருங்கிணைத்தார். எல்லா தொழில்களையும் தற்சார்பாக இந்தியர்கள் நடத்த வேண்டும் என்ற இலக்கின் துவக்கமாகத்தான் கப்பல் என்பதை வ.உ.சி பார்த்தார்.

”நமது தேசம் மற்ற தேசங்களைப் பார்க்கிலும் மேலான நிலைமைக்கு வருவதற்கு, நாம் இவ்வுலகில் காணும் துறைமுகங்களுக்கு எல்லாம் நமது சுதேசிக் கப்பல்கள் போகி வரும்படி இருக்கச் செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது. நாம் பல வருஷ ங்களாக இழந்துவிட்ட தொழில்களை எல்லாம் ஒவ்வொன்றாக மெல்ல மெல்ல கைக்கொள்ள வேண்டும்”

என்று சுதேசி கப்பலுக்கான அழைப்பிலேயே வ.உ.சி குறிப்பிட்டார்.

# வெற்றியாளர்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்பட்டன



அபயம் அறக்கட்டளை அனுசரணையுடன் சிவபூமி அறக்கட்டளை மற்றும் தூமி அமையம் இணைந்து நடத்திய மாணவர்களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் 23.04.2025 அன்று சிவபூமி பெண்கள் சுகவாழ்வு நிலைய ஆண்டு விழாவில் இடம்பெற்றது.



நேரில் வருகை தந்தவர்களுக்கான பணப் பரிசில்கள் அபயம் அறக்கட்டளை அனுசரணையுடன் கலாநிதி. செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களால் வழங்கப்பட்டது. வெற்றியாளர் விபரங்கள் எமது தூமி பங்குனி மாத இதழில் வெளியானது குறிப்பிடத்தக்கது.

# புனித பாப்பரசர் கர்த்தருள் கலந்தார்



மதங்களை தாண்டிய மனிதம் மிக்கவராக இருந்த புனித பாப்பரசர் பிரிவு குறித்து ஆழ்ந்த அஞ்சலிகளை இலங்கைவாழ் கிறிஸ்தவ மக்களுக்கும் உலகில் உள்ள கிறிஸ்தவ மக்களுக்கும் தூமி தெரிவித்துக் கொள்கிறது.

புனித பாப்பரசர் இலங்கை வந்தபோது அப்போது இந்து மாமன்ற தலைவராக இருந்த அமரர். திரு. கந்தையா நீலகண்டன் ஐயா அவர்களின் ஏற்பாட்டில் நல்லை ஆதீனத்துடனான சந்திப்பு இடம்பெற்றது. அப்போது நல்லை ஆதீனம் மஞ்சள் நிறப் பொன்னாடை அணிவித்து புனித பாப்பரசரை கௌரவித்தமையும் அதனை அவர் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டமையும் மதங்களை தாண்டிய நல்லுறவின் அடிப்படையை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.

# வெளியாகிய க.பொ.த உயர்தர பரீட்சை முடிவுகளில் எமக்கு கிடைத்த சில சாதனை விபரங்கள்



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் கந்ததாசன் தசரத் கணித பிரிவில் அகில இலங்கை ரீதியில் இரண்டாமிடத்தையும், யாழ் மாவட்ட ரீதியில் முதலாமிடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஜமுனாநந்தா அவர்களின் மகன்களான இரட்டையர்கள் சரவணன் மற்றும் பிரணவன் ஆகியோர் உயிரியல் பிரிவில் மாவட்ட ரீதியில் முதல் இரண்டு இடங்களையும் பெற்றுக்கொண்டனர். தேசிய மட்டத்தில் மூன்றாவது ஐந்தாவது இடங்களையும் பெற்றுள்ளனர்.




நுவெரலியா பூண்டுலோயாவினை சேர்ந்த யாழ் இந்து மாணவன் ச. அபிசேக்தேவர் 3A சித்தியினை பெற்று பொறியியல் பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மாவட்ட நிலை - 5
தேசிய நிலை - 60

மலையகம், கிழக்கு மாகாணம் மற்றும் வன்னி பிராந்தியத்தில் விஞ்ஞான பிரிவில் கல்வி கற்க வாய்ப்பில்லாத மாணவர்களுக்கு



யாழ் இந்துவில் கல்வி கற்கும் வாய்ப்பினை 2021ம் ஆண்டு முதல் வழங்கி வருகின்றோம். அந்த சந்தர்ப்பத்தினூடாக மேற்படி மாணவன் யாழ் இந்துவில் கல்வி கற்று மெறிற் முறையில் சித்தியடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வெளியாகிய 2024 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி 55 3 ஏ சித்திகளையும், 55 2 ஏ சித்திகளையும், 19 ஏ 2பி சித்திகளையும் பெற்று யாழ். இந்துக் கல்லூரி சாதனை படைத்துள்ளது.

அத்துடன், விஞ்ஞான பிரிவில் 22 பேர் 3A சித்திகளையும் 13 பேர் 2A சித்திகளையும் 06 பேர் A2B சித்திகளையும் பெற்றுள்ளனர். பௌதீக விஞ்ஞான பிரிவில் 27 பேர் 3A சித்திகளையும் 16 பேர் 2A சித்திகளையும் 11 பேர் A2B சித்திகளையும் அடைந்துள்ளனர்.

மேலும், வணிகப்பிரிவில் ஒருவர் 3A சித்திகளையும் 2 பேர் 2A சித்திகளையும் 2 பேர் A2B சித்திகளையும் பெற்றுள்ளனர். கலைப்பிரிவில் 2 பேர் 2A சித்திகளை அடைந்துள்ளனர். இதேவேளை, உயிரியல் தொழிநுட்பப் ( B-Tech) பிரிவிலும் இயந்திரவியல் தொழினுட்ப (E-Tech) பிரிவிலும் தலா ஒருவர் 3A சித்திகளை பெற்றுள்ளனர்.

## இதய அஞ்சலி



ரீஷி தொண்டுநாதன் சுவாமிகளின் தாயார் 92 வயதில் இறையடியில் 26.04.2025 அமைதியடைந்தார். இறுதி வழிபாடு 27.4.2025ஞாயிறு காலை7.00மணிக்கு கோப்பாய் பழம்றோட் சுப்பிரமுணிய கோட்டத்தில் நடைபெற்றது.

அன்னாரின் ஆத்மா இறை பதம் அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.



# ஐபிஎல் வரலாற்றில் மும்பை அணி கண்டு எடுத்த வைரங்கள்

மும்பை இந்தியன்ஸ் அணி இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் மிகவும் வெற்றிகரமான அணிகளில் ஒன்றாக திகழ்கிறது. ஐந்து முறை சாம்பியன் பட்டம் வென்ற இந்த அணி, திறமையான வீரர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு வாய்ப்பளித்து, அவர்களை சர்வதேச அளவில் பெரிய வீரர்களாக மாற்றுவதில் தனித்துவமான பங்களிப்பை வழங்கியுள்ளது. ஆஐ-ன் சிறப்பம்சங்களில் ஒன்று, அதன் திறமை தேடல் (scouting) முறை மற்றும் புதுமுக வீரர்களுக்கு முழு நம்பிக்கையுடன் வாய்ப்பு வழங்கும்.

இந்த அணியால் கண்டறியப்பட்டு, வளர்க்கப்பட்டு, இன்று உலக அளவில் புகழ்பெற்ற சில வீரர்களைப் பற்றி செய்தி தொகுப்பில் பார்ப்போம். 2008-ல் ஐபிஎல் தொடங்கியபோது, மும்பை இந்தியன்ஸ் அணி ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தால் வாங்கப்பட்டு, மிகவும் செலவு செய்யப்பட்ட அணிகளில் ஒன்றாக உருவெடுத்தது. ஆரம்பத்தில் சச்சின் டெண்டுல்கர், சனத் ஜெயசூர்யா போன்ற பெரிய வீரர்களை நம்பியிருந்தாலும், அணியின் உண்மையான

வெற்றி புதுமுக வீரர்களை அடையாளம் கண்டு அவர்களை வளர்த்தெடுத்ததில் தான் உள்ளது.

MI-ன் திறமை தேடல் குழு, உள்ளூர் டி20 போட்டிகளிலிருந்து மாநில அளவிலான கிரிக்கெட் வரை, திறமையை கண்டறிந்து அவர்களுக்கு பெரிய மேடையை அளித்தது. இதன் விளைவாக, பல வீரர்கள் இந்திய அணியில் இடம்பிடித்து, உலக அளவில் தங்கள் திறமையை நிரூபித்துள்ளனர். இந்தப் பட்டியலில் முதன்மையானவர் பும்ரா



ஜஸ்ப்ரீத் பும்ரா:

ஜஸ்ப்ரீத் பும்ரா இன்று உலகின் மிகச் சிறந்த பந்துவீச்சாளர்களில் ஒருவராக திகழ்கிறார். ஆனால், அவரது பயணம் மிகவும் எளிமையாக தொடங்கியது. 2013-ல் மும்பை இந்தியன்ஸ் அவரை அடையாளம் கண்டபோது, அவர் ஒரு அறியப்படாத உள்ளூர் வீரராகவே இருந்தார். அவரது அசாதாரண பந்துவீச்சு நடை மற்றும் துல்லியமான யார்க்கர்கள் MI-ன் கவனத்தை ஈர்த்தன.



அவரது முதல் ஐபிஎல் போட்டியில் 3 விக்கெட்டுகளை வீழ்த்திய பும்ரா, அதன்பின் திரும்பிப் பார்க்கவில்லை. MI-ன் பயிற்சியாளர்கள் மற்றும் மூத்த வீரர்களின் வழிகாட்டுதலுடன், அவர் தனது திறமையை மேம்படுத்தி, இந்திய அணியின் முதன்மை பந்துவீச்சாளராக உருவெடுத்தார். இன்று, டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் உலகின் நம்பர் ஒன் பந்துவீச்சாளராக தரவரிசையில் உள்ளார். 2024 டி20 உலகக் கோப்பையில் இந்தியாவின் வெற்றிக்கு அவர் முக்கிய பங்காற்றியது, MI-ன் திறமை தேடல் திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.



## ஹர்திக் பாண்டியா:

ஹர்திக் பாண்டியாவின் கதை மிகவும் ஊக்கமளிக்கும் ஒன்று. 2015-ல் MI அவரை வெறும் 10 லட்சம் ரூபாய்க்கு வாங்கியபோது, அவர் பரோடாவில் உள்ளூர் டி20 போட்டிகளில் விளையாடி வந்தார். அவரது சகோதரர் க்ருனால் பாண்டியாவுடன் சேர்ந்து, மிகவும் எளிய பின்னணியிலிருந்து வந்த ஹர்திக், MI-ன் மேடையில் தனது அதிரடி ஆட்டத்தால் அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார். அவரது வேகப்பந்து வீச்சு, அதிரடி பேட்டிங் மற்றும் சிறப்பான பீல்டிங் ஆகியவை அவரை ஒரு முழுமையான ஆல்-ரவுண்டராக மாற்றின. 2015, 2017, 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் MI-ன் சாம்பியன் வெற்றிகளில் ஹர்திக் முக்கிய பங்கு வகித்தார். இன்று, அவர் இந்திய அணியின் முக்கிய வீரராகவும், MI-ன் தலைவராகவும் திகழ்கிறார். MI-ன் உரிமையாளர் நீதா அம்பானி ஒருமுறை கூறியது போல, ஹர்திக் மற்றும் க்ருனால் ஆகியோர் மேகி நூடுல்ஸ் சாப்பிட்டு உள்ளூர் போட்டிகளில் விளையாடி வந்தவர்கள் அவர்களை MI பெரிய நட்சத்திரங்களாக மாற்றியது.

## சூர்யகுமார் யாதவ்:



சூர்யகுமார் யாதவ் இன்று டி20 கிரிக்கெட்டின் மிகச் சிறந்த பேட்ஸ்மேன்களில் ஒருவராக அறியப்படுகிறார். ஆனால், அவரது ஆரம்ப காலம் மிகவும் சாதாரணமாக இருந்தது. 2018-ல் MI அவரை அணியில் சேர்த்தபோது, அவர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் சிறிய அளவிலான வாய்ப்புகளை மட்டுமே பெற்றிருந்தார். MI-ல் அவருக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டு,

மிடில் ஆர்டரில் பேட்டிங் செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. அவரது 360 டிகிரி ஷாட்கள் மற்றும் அதிரடி ஆட்டம் அவரை ரசிகர்களின் பேசுபொருளாக மாற்றியது. 2023 ஐபிஎல் சீசனில் அவர் புயல் வேகத்தில் ரன்கள் குவித்து, இந்திய டி20 அணியில் நிரந்தர இடத்தைப் பிடித்தார். இன்று, அவர் உலகின் நம்பர் ஒன் டி20 பேட்ஸ்மேனாக தரவரிசையில் உள்ளார். MI-ன் பயிற்சி முறைகள் மற்றும் அவருக்கு அளிக்கப்பட்ட நம்பிக்கை, சூர்யகுமாரை ஒரு பெரிய வீரராக மாற்றியது.

### திலக் வர்மா:




திலக் வர்மா ஒரு இளம் திறமைசாலியாக 2022-ல் MI-ல் அறிமுகமானார். ஹைதராபாத்தைச் சேர்ந்த இந்த இடது கை பேட்ஸ்மேன், தனது முதல் சீசனிலேயே அனைவரையும் கவர்ந்தார். அவரது அழகிய ஷாட்கள் மற்றும் அழுத்தமான சூழல்களில் ஆடும் திறன், அவரை MI-ன் முக்கிய வீரராக மாற்றியது. 2023 சீசனில் அவர் தொடர்ந்து சிறப்பாக ஆடி, இந்திய டி20 அணியில் அறிமுகமானார். இன்று, அவர் இந்தியாவின் எதிர்கால நட்சத்திரமாக பார்க்கப்படுகிறார். MI-ன் இளம் வீரர்களை வளர்க்கும் திறன், திலக் வர்மாவின் வெற்றியில் தெளிவாகத் தெரிகிறது.

### சாஹல்:




ஐபிஎல் தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் என்ற பெருமையை படைத்திருக்கிறார். அது மட்டும் இல்லாமல் இந்திய அணிக்காக 72 ஒரு நாள் மற்றும் 80 டி20 போட்டிகள் என சாகல் விளையாடி இருக்கிறார். இந்த சாகலை மும்பை அணி தான். முதல் முதலில் கண்டுபிடித்து அவரை வளர்த்தது 2011 ஆம் ஆண்டில் இருந்து சாகல்.



மும்பை அணியின் பயிற்சி பெற்று வந்தார். இந்த சூழலில் 2011-12 சாம்பியன் டிராபி தொடரில் சாகல் மும்பை அணிக்காக ஐந்து இன்னிங்ஸில் விளையாடி மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார். அதேபோன்று ஐபிஎல் தொடரில் சாகல் 2013 ஆம் ஆண்டு ஒரே ஒரு போட்டியின் களமிறங்கினார்.

இதேபோன்று தற்போது இந்திய அணியின் தலைசிறந்த சுழற் பந்துவீச்சாளராக விளங்கும் குல்தீப், மும்பை அணியால்தான் கண்டெடுக்கப்பட்டார். மும்பை அணி நடத்திய ஸ்கவுட்டிங் பயிற்சி முகாமில் குல்தீப் யாதவும் இடம் பிடித்திருந்தார். ஆனால் குல்தீப் ஒரு போட்டியில் கூட மும்பை அணிக்காக விளையாடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



இதே போன்று அக்சர் பட்டேலையும் மும்பை அணி தான் கண்டுபிடித்து அவருக்கு பயிற்சி வழங்கியது. ஆனால் மும்பை அணிக்காக அவர் ஒரு போட்டியில் விளையாடவில்லை என்றாலும் தற்போது இந்திய அணியின் முக்கிய வீரராக விளங்குகிறார். இதேபோன்று ஐபிஎல் தொடரில் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் நிதிஷ் ரானா மும்பை அணிதான் வளர்த்து எடுத்தது. தற்போது இருக்கும் ரமந்திப் சிங், கம்போஜ், நெஹல் வதேரா போன்ற வீரர்களையும் மும்பை அணி தான் முதல் முதலில் கண்டெடுத்தது.

